| | | |
|---|---|---|
| KINNIYA | **தி/கிண்/அப்துல் மஜீது வித்தியாலயம்**<br>**விடுமுறை கால விசேட செயற்றிட்டம் – 2020**<br>**இஸ்லாம்** | **தரம்**<br>**10** |

| | |
|---|---|
| **சுட்டெண் :** | **நேரம் : 02 மணித்தியாலயம்** |

## பகுதி - I

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**(01) மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. 30 ஸுஹுபுகள் அருளப்பட்ட நபி,
   1. மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் 2. ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்
   3. ஷீத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் 4. இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்

2. மனிதன் நேர்வழியில் நடப்பதற்கு இன்றியமையாதது,
   1. ரிஸாலத் 2. அறிவு 3. முன்மாதிரி 4. கல்வி

3. ஐவேளை தொழுகையில் காணப்படும் ரக்அத்துக்களின் மொத்த எண்ணிக்கை,
   1. 13 2. 17 3. 21 4. 5

4. ‘மு.்.மின்களின் மீது நேரம் குறிக்கப்பட்ட கடமை’ என அல்குர்ஆன் குறிப்பிடுவது,
   1. ஸகாத் 2. தொழுகை 3. நோன்பு 4. ஹஜ்

5. ரமழான் மாதத்தில் மாத்திரம் தொழக்கூடிய சுன்னத்தான தொழுகை,
   1. வித்ர் 2. ழுஹா 3. தஹஜ்ஜத் 4. தராவிஹ்

6. ‘தூக்கத்தை விட தொழுகை சிறந்தது.’ எனும் கருத்தைக் குறிப்பது,
   1. ஹய்யாலஸ்ஸலா 2. அஸ்ஸலாது ஹய்ருன் மினன்நவ்ம்
   3. ஹய்யாலல்பளா 4. அல்லாஹு அக்பர்

7. ‘ஹய்யாஅலஸ்ஸலா’ என்பது,
   1. வெற்றியைப் பெற்றுக்கொள்வதற்கு விரைந்து வாருங்கள்.
   2. தொழுகைக்குக்கு விரைந்து வாருங்கள்.
   3. தூக்கத்தை விட தொழுகை சிறந்தது.
   4. அல்லாஹ் மகத்தானவன்.

8. விறகை நெருப்பு அழிப்பதைப் போன்று நல் அமல்களை அழித்து விடுவதாக நபி (ஸல்) அவர்கள் கூறியது,

1. பெருமை 2. பொறாமை
3. பிரிவினை ஏற்படுத்தல். 4. பொய்

9. ''ஜாமிஉல் குர்ஆன்'' என அழைக்கப்படுபவர்,

1. அலி (ரழி) அவர்கள் 2. உமர் (ரழி) அவர்கள்
3. உஸ்மான் (ரழி) அவர்கள் 4. அபூபக்கர் (ரழி) அவர்கள்

10. ''செய்கு'' என்பது,

1. கோத்திரம் 2. குழு 3. சமூகம் 4. கூட்டம்

11. ''கியாஸ்'' என்பது,

1. ஒப்பிடுதல் 2. தீர்மானித்தல் 3. அனுமதித்தல் 4. வேறுபடுத்தல்

12. ''வரஉ'' என்பது,

1. பேணுதல் 2. அன்பு காட்டுதல்
3. வேறுபடுத்தல் 4. கூட்டுச் சேர்த்தல்.

13. ''நப்ஸுல் அம்மாரா பிஸ் ஸூ.்.'' என்பது,

1. தன்னையே நொந்துக் கொள்ளும் உள்ளம் 2. திருப்தியடையும் உள்ளம்
3. தீமையை ஏவும் உள்ளம் 4. அமைதியடையும் உள்ளம்

14. ''முர்தத்'' என்பதன் பொருள்,

1. நயவஞ்சகன் 2. நிராகரிப்பவன்
3. இணைவைப்பவன் 4. இஸ்லாத்தைத் துறந்து சென்றவன்

15. பெரும் பாவம் எனும் கருத்தைத் தரும் அரபுச் சொல்,

1. கப்பாரா 2. ஷிர்க் 3. கபாயிர் 4. நிபாக்

16. கட்டாயக் குளிப்புக்காகப் பயன்படுத்தப்படும் நீர்,

1. மாஉன் முஸ்த.்.மல் 2. மாஉன் கலீல்
3. மாஉன் முத்லக் 4. மாஉன் நஜீஸ்

17. ''அஸ்த.்.பிருல்லாஹ்'' என்பதன் பொருள்,

1. அல்லாஹ்வுக்கு கட்டுப்படுதல். 2.அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுதல்.
3. மரங்களைப் பாதுகாத்தல். 4. அல்லாஹ்வைத் துதி செய்தல்.

18. கட்டாயமாக கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டிய தொழுகை,

1. தராவிஹ் 2. பெருநாள் தொழுகை 3. ஜூம்ஆ 4. ஜனாஸா

19. நபி (ஸல்) அவர்களுக்கு முதன் முதலாக வஹி அருளப்பட்ட இடம்,

1. க.்.பா 2. ஹிறாக் குகை 3. மஸ்ஜிதுன் நபவி 4. தௌர் குகை

20. மனிதர்களில் மிகச் சிறந்தவர் என நபி(ஸல்) அவர்களால் புகழப்பட்டவர்கள்,

1. மனிதர்களுக்கு பயன்தரும் சேவைகளைச் செய்தவர்.
2. மனிதர்களுக்கு தர்மம் செய்பவர்.
3. எளிய வாழ்க்கை வாழ்பவர்.
4. அதிகமாக ஹஜ் செய்பவர்.

21. தொழுகையில் கட்டாயம் ஓதப்பட வேண்டியது,

1. ஸூறா பாத்திஹா 2. குனூத் 3. வஜ்ஜஹத் 4. தஸ்பீஹ்

22. ருகூஉ, ஸுஜூது இல்லாத தொழுகை,

1. கிரகணத் தொழுகை 2. பெருநாள் தொழுகைகள்
3. ஜனாஸா தொழுகை 4. ழுஹாத் தொழுகை

23. தீர்வு காணப்படாத பிரச்சினையொன்றுக்காக குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் தீர்வுகாணல்,

1. கராமத் எனப்படும். 2. இஜ்திஹாத் எனப்படும்.
3. உர்ப் எனப்படும். 4. இல்லத் எனப்படும்.

24. ‘‘குல்லதைன் நீர்’’ என்பது,

1. 310 லீற்றரையும் விட அதிகமான நீர் 2. 210 லீற்றரையும் விட அதிகமான நீர்
3. 260 லீற்றரையும் விட அதிகமான நீர் 4. 360 லீற்றரையும் விட அதிகமான நீர்

25. ‘மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கையை நம்பிக்கை கொள்வது’ ஈமானின்,

1. ஐந்தாவது அம்சம் 2. ஆறாவது அம்சம்
3. நான்காவது அம்சம் 4. மூன்றாவது அம்சம்

26. ஜும்ஆ நேரத்தில் வியாபாரம் செய்வது,

1. ஹராம் 2. முபாஹ் 3. மக்ரூஹ் 4. ஜாயிஸ்

27. வுழூச் செய்ய முடியாத நிலையிலிருப்போர்,

1. தயம்மும் செய்ய வேண்டும். 2. குளிக்க வேண்டும்.
3. தொழுகையைப் பிற்படுத்த வேண்டும். 4. தொழுகையை ஜம்உ செய்ய முடியும்.

28. ஒரு முஸ்லிம் தனது பெற்றோரை உரிய முறையில் பராமரிப்பது,

1. பர்ளு ஐன் 2. பர்ளு கிபாயா 3. ஜாயிஸ் 4. சுன்னத்

29. தொழுகையின் பர்ளுகள்,

1. 10 2. 19 3. 17 4. 20

30. நீரின் வகைகளில் ‘தாஹிர்’ என்பது,

1. பயன்படுத்திய நீர் 2. மிகச் சுத்தமான நீர் 3. அசுத்தமான நீர் 4. சுத்தமான நீர்

31. தூய அகீதாவைப் பின்பற்றுவோர்,

1. சுன்னிகள் 2. ஜபரிய்யாக்கள்
3. ஷீயாக்கள் 4. அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாத்

32. இலங்கையில் இஸ்லாம் பரவியது,

1. ஸஹாபாக்களின் மூலமாக 2. சுன்னிகளின் மூலமாக
3. தாபிஈன்களின் மூலமாக 4. வியாபாரிகளின் மூலமாக

33. நபி (ஸல்) அலைஹி வஸல்லம் அவர்கள் தனது கன்னி உரையை நிகழ்த்திய இடம்,

1. அரபா மைதானம் 2. ஹிறாக் குகை 3. ஸபா மலை 4. க.ஃ.பதுல்லாஹ்

34. ‘அல் வதூத்’ எனும் அல்லாஹ்வின் அழகுத் திருநாமத்தின் பொருள்,

1. கருணையாளன் 2. மிகவும் இரக்கமுடையவன்
3. சாந்தியை ஏற்படுத்துபவன் 4. பொறுமையாளன்

35. ஸுஜூத் செய்யும் போது நிலத்தைத் தொடும் உறுப்புக்களின் எண்ணிக்கை,

1. 7 2. 5 3. 9 4. 3

36. ‘வஸிய்யத்’ என்பது,

1. இறுதி விருப்பம் 2. கொடுக்கல் வாங்கல்
3. வியாபாரப் பொருட்கள் 4. பொறுப்பு

37. ‘ஆரம்பத் தக்பீர்’,

1. தக்பீர் தஹ்ரீமா 2. வஜ்ஜஹத் 3. துஆஉல் இப்திதாஹ் 4. இ.ஃ.திதால்

38. ‘ஸபூர் வேதம்’ வழங்கப்பட்ட நபி,

1. ஈஸா அலைஹிஸ்ஸலாம் 2. மூஸா அலைஹிஸ்ஸலாம்
3. தாவூத் அலைஹிஸ்ஸலாம் 4. முஹம்மத் நபி(ஸல்)அலைஹிவஸல்லம்

39. ‘அர் ரூஹானிய்யத்’ இற்கு உதாரணமாகக் கொள்ளக்கூடியது,

1. வேதங்களை நம்புதல்
2. மலக்குகளை நம்புதல்
3. கப்ருடைய வாழ்க்கையைப் பற்றி நம்புதல்
4. கழா கத்ர் பற்றி நம்புதல்.

40. நபி (ஸல்) அலைஹிவஸல்லம் அவர்களிற்கு வஹி இறக்கப்பட்ட போது முதன் முதலாக அவரை நபியென்று ஏற்றுக் கொண்டவர்,

1. அபூபக்கர் (ரழி) அவர்கள் 2. கதீஜா (ரழி) அவர்கள்
3. வரகா பின் நவ்பல் 4. அபூ தாலீப்

## பகுதி II

- **முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**
- **முதலாம் வினாவுக்கு 20 புள்ளிகளும் ஏனைய வினாவுக்கு 10 புள்ளிகளுமாக வழங்கப்படும்.**

**(01) சுருக்கமான விடை தருக.**

1. மக்காவாசிகள் முஹம்மத் நபி (ஸல்) அவர்களிற்கு இட்ட சிறப்புப் பெயர்கள் **2** தருக.
2. 'இஹ்லாஸ்' எனும் சொல்லின் கருத்தை எழுதுக.
3. 'தாருல் பனா', 'தாருல் பகா' எனும் சொற்களின் பொருளைத் தருக.
4. 'வஹி கைரு மத்லுவ்' என்றால் என்ன?
5. 'தர்தீபுந் நுஸூல்' பற்றி விளக்குக.
6. எக் கலீபாவின் காலத்தில் அல்குர்ஆன் தொகுக்கப்பட்டது?
7. 'இஜ்மாஉஸ் ஸுகூத்தி' ஐப் பற்றி விளக்குக.
8. ஜாஹிலிய்யாக் காலத்தைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக.
9. 'ஸீறா' எனக் குறிப்பிடப்படுவது யாது?
10. வஹியை எழுதுபவர்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தும் பெயர் யாது?

**(02)** 1. இஸ்லாம் கூறும் நற்பண்புகள் **03** தருக.

2. பெற்றோர் மீது பிள்ளைகள் அன்பு காட்டவேண்டிய முறை பற்றி விளக்குக.
3. தர்மம் செய்வதன் பயன்கள் யாவை?

**(03)** 1. 'ஸுஹூத்' என்றால் என்ன?

2. தௌபா ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அவசியமான நிபந்தனைகள் **03**ஐக் குறிப்பிடுக.
3. வஹி இறங்கப்பட்ட முறை யாது?

**(04)** 1. உஸ்மான் (ரழி) அவர்கள் 'ஜாமிஉல் குர்ஆன்' என அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?

2. அபூபக்கர் (ரழி) அவர்களின் காலத்தில் அல்குர்ஆன் தொகுக்கப்பட காரணம் யாது?
3. அல்குர்ஆன் தொகுப்பில் ஸைத் இப்னு ஸாபித்(ரழி) அவர்களின் பங்களிப்பைக் குறிப்பிடுக.

**(05)** 1. சுன்னாவைப் பின்பற்றுவதன் மூலம் கிடைக்கக்கூடிய பயன்களைக் குறிப்பிடுக.

2. சுன்னாவைப் பாதுகாப்பதற்கு அறிஞர்கள் மேற்கொண்ட முயற்சிகள் யாவை?
3. இஜ்மாவை ஏற்று அதன்படி நடப்பவர்களுக்கு கிடைக்கும் நன்மை யாது?

**(06)** 1. இஜ்மாவின் பயன்கள் **02**ஐக் குறிப்பிடுக.

2. துணை மூலாதாரங்களைக் குறிப்பிடுக.

3. கியாஸின் பிரிவுகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

**(07)** 1. அர்கம் (ரழி) அவர்களின் வீடு ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது?

2. நபி (ஸல்) அவர்களும் ஹாசிம் கூட்டத்தினரும் சமூக விரோதிகளாக்கப்பட்டதற்கான காரணம் யாது?

3. நபி (ஸல்) அவர்கள் சவால்களை எவ்வாறு வெற்றி கொண்டார்கள்?

**(08) கீழ்வரும் ஏதேனும் இரண்டு விடயங்களைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக.**

1. நம்பிக்கையாளன்
2. தர்மம் செய்தல்.
3. ஸீறாவின் முக்கியத்துவம்

***